விலை: 50.00 பக்கங்கள் : 16

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


சங்கு 25 ஒலி 325 வள்ளுவர் ஆண்டு 2055

ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை (08.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# ஜனநாயகத்துக்கு ஜே.வி.பி ஆபத்து

## முன்னாள் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

ஜனநாயகத்துக்கு ஜே.வி.பியினர் ஆபத்தானவர்கள் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் புகையிரத விபத்து யாழ்.மாநகர சபை பணியாளர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற புகை 15

## இரத்தக் காயங்களுடன் முல்லையில் ஆசிரியர் சடலமாக மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இரத்தக் காயங்களுடன் ஆசிரியர் ஒருவர் 15
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
நவீன தமிழ்த் தேசியத்தை நோக்கி





ஏற்றமிகு எதிர்கால சந்ததியின் ஆற்றல்மிகு ஆளுமையை ஆதரிக்க....

தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு

(C-145)

தவச்செல்வம் சிற்பரன்
(கட்டடக் கலைஞர், பழைய மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி, மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)

தமிழ் மக்கள் கூட்டணி X 3

8 திசையும் சூரியன்
தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)



வெளிப்படையான பேச்சு
அரசியல் நேர்மை
பதவிக்கு விலை போகாமை
வீ.ஆனந்தசங்கரி
X 8
யாழ் - கிளி தேர்தல் மாவட்டம்
(C-136)

## 334 பேர் கைது

பொதுத் தேர்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 9 வேட்பாளர்கள் உள்ளிட்ட 334 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேட்பாளர்கள் தவிர, தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 325 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-7)

## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

அமரர்
சிவகுரு பார்வதி



கடந்த 11.10.2024ம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு அமரர். சிவகுரு பார்வதி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 09.11.2024ம் திகதி காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். 10.11.2024ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து மதியம் 12.00 மணிக்கு மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(C-1540)

குடும்பத்தினர்
077 430 2323

## வரதாஞ்சலி மலர் வெளியீடும் நினைவுப் பேருரையும்

திகதி
10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) 10.30 மு.ப
இடம்
ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் நல்லூர்



### நிகழ்ச்சி நிரல்

10.30மு.ப உருவப்படம் திரைநீக்கம்
10.31மு.ப அமரருக்கு மலர்மாலை அணிவித்தல்
10.32மு.ப விளக்கேற்றல்
11.00மு.ப "வரதாஞ்சலி" மலர் அறிமுகம்
11.15மு.ப நினைவுப் பேருரை
12.30பி.ப அமரர் நினைவுதினச் செயல்திட்டங்கள் முன் அறிவிப்பு
1.00பி.ப நன்றியுரை
1.10பி.ப மதியபோசன உபசரிப்பு

வையகம் போற்றும் நல்லாசானாக வாழ்ந்து நன் மாணாக்கர் பலரை உருவாக்கி இன்றும் எங்கள் மனங்களில் நிறைத்திருக்கும்

அமரர்
தம்பிப்பிள்ளை வரதராஜா B.Ed

மேற்படி நினைவுப் பகிர்வுசார் மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்தும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன உபசரிப்பிலும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

THE EXPRESS INSTITUTE KOPAY - A BOON TO STUDENTS

(2589)

ஏற்பாட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசார நடவடிக்கைகள்

## திங்கள் நள்ளிரவுடன் நிறைவு

**(கொழும்பு)**

**2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவுடன் நிறைவுக்கு வரவுள்ளது.**

நவம்பர் 11 ஆம் திகதி நள்ளிரவுடன் அமைதியான காலம் ஆரம்பமாகிறது. அந்த நேரத்தில் எந்த பிரசாரமும் செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலானது நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஒக்டோபர் 30 மற்றும் நவம்பர் 1 மற்றும் 4 ஆம் திகதிகளில் தபால்மூலம் வாக்களிக்க முடியாத முப்படை முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களின் வாக்காளர்களுக்கும் நேற்று தபால் வாக்குகளை அளிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊடகங்களுக்கு எதிரான நிலைப்பாடுகளுடன்

# அரசால் முன்னோக்கி பயணிக்க முடியாது



## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகங்களுக்கு எதிரான நிலைப்பாடுகளுடன் அரசாங்கத்தால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது. ஊடகச் சுதந்திரம் அற்ற நாட்டில் ஜனநாயகம் உள்ளிட்ட எதையும் எதிர்பார்க்க வேண்டாம். இது நாட்டின் அழிவுக்கான ஆரம்பமாகக்கூட இருக்கலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதைய அரசாங்கத்தால் ஊடகங்களுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாட்டின் முதற்பிரஜையான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முதன் முதலாக ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தார். ஊடகங்கள் புதிய ஆடை அணிய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டது ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும்.

அது மாத்திரமின்றி துறைக்குப் பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத், ஊடகங்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை அனுபவிப்பதாகவும் அதனை குறைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது நாம் தினந்தோறும் கேட்ட ஒன்றாகும். ஆட்சிக்கு வர முன்னர் தேர்தல் மேடைகளில் ஆற்றிய உரையின் போது, நாம் வந்த பின்னர் சில ஊடக நிறுவனங்களை மூட வேண்டியேற்படும் என்று கூடத் தெரிவித்தனர்.

தற்போது அந்த அபாயம் ஏற்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தொழிற் சங்கங்கள்கலைக்கப்பட வேண்டும் என்கின்றனர். எதிர்க்கட்சி கூடத் தேவையில்லை என்கின்றனர்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்தை அடக்குவதற்கு அரசாங்கம் முனைகின்றது. தேர்தலுக்கு முன் ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறியவர்கள் தற்போது அவற்றை அச்சுறுத்துவது ஒழுக்கமானதல்ல என்றார். (ம-7)

# வெளிநாட்டு கையிருப்பு நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கையின் உத்தியோக பூர்வ வெளிநாட்டு கையிருப்பு 6.46 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த செப்ரெம்பர் மாதம் 5.99 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது. (ம-7)

# துப்பாக்கிச் சூடு இருவர் காயம்

(கொழும்பு)

வென்னப்புவ - கிம்புல் வான பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஆண் ஒருவரும் பெண் ஒருவருமே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# ரணில் உணவகமொன்றை ஆரம்பிப்பார் என்று எண்ணினேன்

## பிரசாரத்தில் அநுர கிண்டல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோற்ற பின்னர் பெருமளவு சமையல்காரர்கள் தனக்குத் தேவை என வேண்டுகோள் விடுத்தவேளை, அவர் உணவகம் ஒன்றை ஆரம்பிக்கப் போகின்றாரோ? என நினைத்தேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளிடம் சொகுசு வீடுகள், தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சொகுசு வாகனங்கள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன.



நாம் அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அதனைத்தான் தேசிய மக்கள்சக்தி செய்யவுள்ளது.

அரசியல் என்பது நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்படிய வேண்டும். அதற்கு மாறாக சட்டத்தை மீறிச் செயற்படக்கூடாது.

அப்படி ஒரு நாட்டைத் தான் தேசிய மக்கள் சக்தி உருவாக்கவுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

# அனைத்துப் பாடசாலைகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கண்டி)

அனைத்துப் பாடசாலைகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஸ்தாபிக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான் கல்வி அமைச்சைப் பொறுப்பேற்று 6 வாரங்கள் ஆகின்றன. இதிலுள்ள பல பிரச்சினைகளை நான் இனங்கண்டுள்ளேன். ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நான் அவதானம் செலுத்தியுள்ளேன்.

இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

எமக்கு உலகின் சிறந்த பாடத்திட்டத்தை உருவாக்க முடியும். தலைசிறந்த வல்லுநர்களை இதற்காகக் கொண்டுவந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அனைத்துப் பாடசாலைகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைகளை உருவாக்கவும் முடியும். இதற்கு உதவிகளை செய்ய பலர் தயாராகவே உள்ளார்கள்.

சம்பளப் பிரச்சினை, பதவி உயர்வுப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்குமானால், உலகிலுள்ள சிறந்த கல்வி முறைமையைக் கொண்டு வந்தாலும் எம்மால் வெற்றி பெற முடியாது இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (ம-7)




நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் சூரன்போர் நேற்று இடம்பெற்றபோது...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்





- முல்லைத்தீவு குருந்தூர் மலை முதல் வவுனியா வெடுக்குநாரி மலை ஈறாக வடக்குக் கிழக்கெங்கும் தமிழரின் அடையாளங்கள் அழிக்கப்பட்டபோது சட்டப்போர் தொடுத்தவன்.
- நூற்றுக்கும் அதிகமான பொதுநல வழக்குகளில் கட்டணமின்றிக் களமிறங்கியவன்.
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளாகத்தினுள் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைத் தொடுத்தவன்.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அப்பாவிகளுக்காகத் துணிந்து களத்தில் இறங்கியவன்.
- மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள், மாவீரர் நாள் நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு வடக்குக் கிழக்கெங்கும் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிறைந்த வழக்குகளை முறியடித்தவன்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது இறந்த உறவுகளை நினைவுகூர்ந்த பத்து அப்பாவிகளைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தபோது சட்டத்தின் வழியில் போராடி விடுவித்தவன்.
- திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியமைக்காகக் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை வழக்காடி விடுவித்தவன்.
- யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பொலிஸ் காவலில் மரணமடைந்த இளைஞர்களுக்காக நீதி கேட்டவன்.
- மானிப்பாயில் தனியார் காணிகளை ஆக்கிரமித்திருந்த அரச ஆதரவு ஆயுதக்குழுவை வழக்காடி வெளியேற்றியவன்.





சட்டப் போரைத் தொடர....

கனகரட்ணம்
சுகாஷ்
(சட்டத்தரணி)


X 1

இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!

(சி-132)

# பொதுத் தேர்தலில் குறைவடைந்துள்ள பிரசாரங்கள்

## அரசியல் ஈடுபாடு குறைவடைந்ததே காரணம் என்கிறார் ஹெட்டியாராச்சி

**(கொழும்பு)**

**பொதுத்தேர்தலில் 8888 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும் ஆயிரத்திற்கும் குறைவான வேட்பாளர்களே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



இது அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மாற்றமடைந்துள்ளமையும், பாரம்பரிய கட்சி கட்டமைப்பு குறித்த அதிருப்தியும் இதற்கு காரணம் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வழமையாக வாக்காளர்களை உள்வாங்குவதற்காக 600,000 கட்சி அலுவலகங்களை அமைப்பார்கள், ஆனால் இம்முறை 9241 கட்சி அலுவலகங்களே இயங்குகின்றன.

பொதுச்சொத்துக்கள், துஷ்பிரயோகம் போன்றவை தற்போதும் காணப்படுகின்ற போதிலும் ஆபத்தான கட்டத்தை அவை நெருங்கவில்லை என தெரிவித்துள்ள ரோஹண ஹெட்டியாராச்சி 25 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவையும் ஆபத்தான கட்டத்தை அடையவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## பொய் தகவல்களுக்கு சட்ட நடவடிக்கை

### எச்சரிக்கும் பொலிஸார்

(கொழும்பு)

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 1997 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த நூற்றுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளில் 18 முறைப்பாடுகள் மட்டுமே சரியானவை.

சுமார் நூற்றிற்கும் மேற்பட்ட தகவல்கள் பொய்யானவை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும் இதுபோன்ற பொய்யான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமை முறைகளை மாற்றியமைக்க வேண்டும்

## நாகரத்தினம் கமலரூபன்



(யாழ்ப்பாணம்)

பலமான அரசியல் கட்டமைப்பானது உயிர்ப்புட்டமான அரசியலுக்கு என்றும் இன்றியமையாத ஒன்றாகும்.

எனவே பழைமையான முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் காலத்தின் தேவையறிந்து எனது அர சியல் பிரவேசமானது மாற்றத்துடனான நம்பிக்கையுடன் அமையப் பெற்றுள்ளது என சுயேட்சைக்குழு 2 ஊஞ்சல் சின்னத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும் இளம்தொழில் முயற்சியாளருமாகிய சட்டத்தரணி இ.எஸ்.பி.நாகரத்தினம் கமலரூபன் தெரிவித்தார்.


மேலும் தெரிவிக்கையில் இரண்டு ஆண்டு கால செயற் திட்டங்களில் முதன்மையாக தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல், யாழ்ப்பாண மற்றும் கிளி நொச்சி தேர்தல் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 6 உறுப்பினர்களுக்கு இடையிலான ஒருமித்த நிலைப்பாடு, இளைஞர் வேலைவாய்ப்பு திட்டம், அறி வோம்-ஆழ்வோம் செயல் திட்டம் போன்ற குறுங்கால திட்டங்களை நடைமுறைப்ப டுத்துவதன் மூலம் திட்டமிடப்பட்ட காலத்தில் மேன்மை யான வளர்ச்சியினை காணலாம்.

நிலையான நீடித்த அரசியல் தீர்வு முன்னெடுப்புகளை முதன்மையாகக் கொண்டு 2030ஆம் ஆண்டினை நோக்கிய செயற்றிட்டங்களாக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவான பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய செயற்றிட்ட முன்மொழிவுகளும் 2050 ஆம் ஆண்டை நோக்கிய செயற்றிட்டங்களாக விவசாய மீன்பிடி கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவு, இளைஞர்களின் இருப்பை முன்னிலைப் படுத்த சிறந்த பொருளாதார கட்டமைப்புடன் நோக்கிய உயர்நிலையான தேசம் என்ற தூர நோக்குடனான சிந்தனை செயற்றிட்டங்களில் வரைபுகளாக உள்ளன.

எனவே இவ்வாறான செயற்றிட்டங்களை கொண்டு சிறந்ததொரு அரசியல் மாற்றத்தை கொண்டு வருவதற்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என தெரிவித்தார். (நி-6)

# த.தே.ம.முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

தேர்தல்களம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது.

யாழ். கொக்குவிலில் உள்ள கட்சி அலுவலகத்தில் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது கட்சி யின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், பிரசார செயலாளர் நடராஜர் காண்டீபன், கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் மற்றும் கட்சியின் வேட்பாளர்களான திருமதி வாசுகி சுதாகர், திருமதி க.ஞானகுணேஸ்வரி, திருமதி ஜீன்சியா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6)

## 5 கி.மீ பாதையை விடுவிடுத்து நாடகமாடுகிறது அரசு

### இம்மானுவல் ஆனல்ட்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களில் அக்கறை உள்ளவர்கள் போல் தேர்தலுக்காக நாடகம் ஆடாமல் மக்களின் வாழ்விடங்களை விடுவிக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் இம்மானுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.


மேலும் தெரிவிக்கையில், பல நூறு ஏக்கர் மக்கள் வாழ்விடம் முப்படைகளின் ஆக்கிரமிப்பில் இருக்கும் போது 5 கிலோ மீற்றர் பாதையை விடுவித்து தேர்தலுக்கான அரசியல் நாடகம் ஆடுகிறது அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி.

யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இன்றும் தேசிய பாதுகாப்பு எனும் போர்வையில் தமிழ் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரம்பில் வைத்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே தமிழ் மக்கள் சிந்தித்து செயற்பட்டு தமிழர்களின் கட்சியினை பலப்படுத்தி பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க வேண்டும் என தெரிவித்தார். (6-6)

# மாற்றத்தை நோக்கி நம்பிக்கையுடன் பயணிப்போம்

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

நாம் ஒரு தனிதேச மென்பதை உரக்கச் சொல்லுகிற அதே வேளையில் ஒரு தேசமாக வாழ்வதற்கு வேண்டிய அணுகுமுறைகளை நாம் கைவிடக் கூடாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்ததாவது,

எம்மை ஒரு தேசமாக அங்கீ கரிப்பது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்கின்ற உண்மையை இலங்கையில் வாழும் மற்றைய சமூகத் தினருக்கும் உணரச் செய்தல் வேண்டும்.

தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலைப்பாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் சம்பந்தமாக சிந் தித்து செயலாற்றுவதற்கான பொருத்தமானதொரு தருணம் இதுவாகும்.

இளைய சமுதாயத்தின் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு நாம் மூலதனங்களை அமுத்தமாக செய்ய வேண்டும்.

எமது போராட்டம் நீண்ட, நெடியதானதாக இருந்தாலும் அறவழியில் சாத்வீக முறைகளை கைக்கொண்டு முன்னெடுத்து வருகிறோம். எனவே எதிர்காலத்தை நோக்கி நம் பிக்கையோடு சேர்ந்து பயணிக்க தமிழரசுக் கட்சிக்கும் எனக்கும் ஆதரவு அளிக்குமாறு தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















## ரயில் மோதி படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை ரயில் மோதி அரச உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவற்குழி புகையிரத நிலையத்தை அண்மித்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றை கடக்க முற்பட்ட போதே ரயில் மோதி படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ட்ரம்பிற்கு வாழ்த்து தெரிவித்த மோடி




(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி யாளராக அறிவிக்கப்பட்ட தையடுத்து அவருக்கு உலகம் முழுவதும் உள்ள அரசியல் தலைவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து கொண்டனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்பை தொலைபேசி வழியே தொடர்பு கொண்ட பிரதமர் மோடி தன்னு டைய வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். குறித்த அழைப்பில் உலக அமை திக்காக இரு தலைவர்க ளும் ஒன்றிணைந்து பணி யாற்றுவது என உறுதி மேற்கொண்டனர் என அர சியல் தகவல்கள் தெரிவித் துள்ளன.

ஒட்டுமொத்த உலகமும் பிரதமர் மோடியை விரும் புகிறது. இந்தியா ஒரு பிர மிக்க வைக்கும் நாடு. பிரதமர் மோடி ஒரு உன் னதம் வாய்ந்த நபர். பிரதமர் மோடியையும், இந்தியாவையும் உண் மையான ஒரு நண்பராக கருதுகிறேன். என பிரதமர் மோடியிடம் ட்ரம்ப் தெரி வித்ததாக தகவல்கள் தெரி விக்கின்றன.

வெற்றி பெற்ற பின்பு முதன்முதலாக நான் பேசிய உலகத் தலைவர்களில் பிர தமர் மோடியும் ஒருவர் என ட்ரம்ப் தெரிவித்தார். (நி-8)

## முதல் உலக அழகி கிகிஹகன்சன் மறைவு

(கலிபோர்னியா)

முதல் உலக அழகியாக மகுடம் சூட்டப்பட்ட சுவிட் சர்லாந்தின் 95 வயது கிகிஹகன்சன் வயது முது மையால் காலமானார். முதல் உலக அழகி போட்டி பிரிட் டன் தலைநகர் லண் டனில் 1951ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதியன்று நடை பெற்றது. சுவிட்சர் லாந்தைச் சேர்ந்த மொடல் அழகியான கிகிஹகன்சன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் மாடல் அழகிகள் போட்டியாளர் களாக பங்கேற்றனர்.

இதில் உலகின் முதல் உலக அழகியாக கிகிஹ கன்சன் மகுடம் சூட்டப் பட்டார். அப்போது அவருக்கு வயது 22. அதன் பிறகு சர்வதேச அளவில் பிரபல மானார். டி.வி. ஷோக்க ளிலும் பங்கேற்றார். அதற்கு முன்பாக இவர் 1951 ஆம் ஆண்டில் மிஸ் சுவீடன் பட்டமும் பெற்றார்.


அமெரிக்காவின் கலி போர்னியாவில் குடும்பத் துடன் வசித்து வந்த நிலை யில் வயது முதுமை காரண மாக கடந்த 4 ஆம் திகதி தூக்கத்தில் உயிரிழந்ததாக உலக அழகிப் போட்டியை நடத்தும் அமைப்பின் இணையதளத்தில் செய்தி வெளியிடப் பட்டுள்ளது. இதனை கிகிஹகன்சன் மகன் ஆண்டர்சனும் உறுதி செய்தார். கிகிஹகன்சன் மறைவுக்கு முக்கிய பிரப லங்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக இரங்கல் தெரி வித்து வருகின்றனர். (நி-8)




# அமெரிக்க ஜனாதிபதிய

# போர்க்களத்தில்

## எச்சரிக்கும் ஹிஸ்புல்லா அ




**(காசா)**

**ஜனாதிபதிய பொறுப்பேற்றா வார்த்தைக்கு மில்லை என ஹ அமைப்பின் நயிம் காசிம் துள்ளார்.**

நடைபெற்று முடிந்த அமெரிக்க தேர்தலில் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண் டும் தெரிவு செய்யப்பட் டுள் இத அவ கை மோ

## நாங்கள் எதிர்பார்த்த முடிவு இதுவல்ல பராக் ஒபாமா வெளிப்படை




(வோஷிங்டன்)

"ஜனாதிபதியாகத் தேர்வாகி உள்ள ட்ரம்ப் மற்றும் துணை ஜனாதிபதியாக உள்ள வான்ஸ் ஆகியோரின் வெற்றிக்கு வாழ்த்துகள். இது நாங்கள் எதிர்பார்த்த முடிவு அல்ல என அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக அமெ ரிக்கா பல்வேறு சிக்கல்களை சந்தித்து உள்ளது. விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகள் மக்கள் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் அவர்களால் ஏதும் செய்ய முடிய வில்லை. அந்த நிலைமைகள் உலகெங் கிலும் உள்ள ஜனநாயகப் பொறுப் பாளர்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியது. நல்ல செய்தி என்ன வென்றால், இந்தப் பிரச்சினைகள் தீர்க்கக்கூடியவை.

நாம் ஒருவருக்கொருவர் செவிசாய்த்தால் மட்டுமே இந்த நாட்டை சிறந்ததாக மாற்ற முடியும். இதற்கு, அரசியலமைப்பு கோட்பாடு கள் மற்றும் ஜனநாயக நெறி முறைகளை கடைபிடிக்க வேண் டும். மக்களுக்கு நல்ல நம்பிக் கையையும் கருணையையும் வழங்க வேண்டும். இப்படித்தான் நாம் இவ்வளவு தூரம் வந் திருக்கிறோம். அப்படித்தான் ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவோம். எனத் தெரிவித்தார்.

கமலா ஹாரிஸின் தேர்தல் பிரசாரத்தில் ஒபாமா பங்கேற்று, ஆதரவு திரட்டினார். ஒபாமா மனைவி மிச்செல், கமலா ஹாரிஸின் இரண்டு தேர்தல் பிரசார கூட்டத்திற்கு தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத் தக்கது. (நி-8)

## டொனால் கமலா ஹ



(வோஷிங்டன்)


நடந்து முடிந் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெ குடியரசுக் கட்சியை சேர்ந்த டொனால்ட்ர பிற்கு ஜனநாயகக் கட்சியி வேட்பாளர் கமல ஹாரிஸ் தனது வாழ்த்து களைத் தெரிவித்துள்ளா

நேற்று முன்தின வெளியான தேர்த முடிவுகளின் படி 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தியாக யார் வந்தாலும் ...ல் மட்டுமே தீர்வு!

## ... அமைப்பு



**...தியாக யார் ...றாலும் பேச்சு ...க்கு சாத்திய ... ஹிஸ்புல்லா ...ன் தலைவர் ...சிம் தெரிவித்**

...டுள்ள நிலையில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் "நீடிக்கும் இந்த மோதலுக்கு அரசியல் ரீதியான தீர்வு எட்டப்பட வாய்ப்பில்லை. போர்க்களத்தில் மட்டுமே இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். அமெரிக்க ஜனாதிபதியாக யார் பொறுப்பேற்றாலும் எத்தகைய மாற்றமும் ஏற்படப் போவதில்லை." என்று நயிம் காசிம் தெரிவித்தார். (நி-8)

# ட்ரம்பின் வெற்றியுடன் உச்சம் தொட்ட பிட்கொயின்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் வெற்றியுடன் டிஜிற்றல் நாணயமான பிட்கொயின் ஆனது சாதனை உச்சத்தை எட்டியது.

அதன்படி உலகின் மிகப் பெரிய டிஜிற்றல் நாணயமானது 7 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்து இதுவரை இல்லாத அளவுக்கு 75,389 அமெரிக்க டொலர்களாக உச்சத்தை எட்டியது.

இந்த மைல்கல் கடந்த மார்ச் மாதத்தில் பதிவான 73,803.25 அமெரிக்க டொலர்கள் என்ற உச்ச நிலையினை முறியடித்தது.

மிகவும் தேவையான டிஜிற்றல் நாணயத்துக்கு முன்னுரிமை அளிப்பதாக ட்ரம்பின் தேர்தல் வாக்குறுதியைத் தொடர்ந்து பிட்கொயின் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்தது.

அமெரிக்க தேர்தல் செய்திகளைத் தொடர்ந்து உலகெங்கிலும் உள்ள சந்தைகள் மற்றும் நாணயங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கடுமையாக மாற்றம் கண்டன.

குறிப்பாக ட்ரம்ப் ஒரு வரலாற்று வெற்றியுடன் மீண்டும் வெள்ளை மாளிகைக்கு திரும்புவதால் டொலரின் பெறுமதி கடந்த எட்டு ஆண்டுகளில் மிகப் பெரிய இலாபத்தை பதிவு செய்தது.

அதன்படி பவுண்டு, யூரோ மற்றும் ஜப்பானிய யென் உள்ளிட்ட பல்வேறு நாணயங்களுக்கு எதிராக டொலர் பெறுமதி சுமார் 1.65% உயர்ந்தது.

இது தவிர முக்கிய அமெரிக்க பங்கு குறியீடுகள் உயர்ந்தன. வங்கிகள் சிறப்பாக செயற்பட்டதாகவும் கூறப்படுகிறது. (நி-8)

# ...னால்ட் ட்ரம்பிற்கு ... ஹாரிஸ் வாழ்த்து



...ன்)

... முடிந்த ...னாதிபதித் ...றி பெற்ற ...ட்சியைச் ...ல்ட் ட்ரம் ...க கட்சியின் ... கமலா ... வாழ்த்துக் ...த்துள்ளார். ...ன் தினம் ... தேர்தல் ...படி 270 இற்கும் கூடுதலான எலக்டோரல் வாக்குகளைப் பெற்று முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

இந்நிலையில் தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர், முதன்முறையாக ஹோவர்டு பல்கலைக் கழகத்தில் தன்னுடைய ஆதரவாளர்கள் முன் தோன்றி கமலா ஹாரிஸ் உரையாற்றினார்.

இதன்போது "அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற தோல்வியை தான் ஏற்றுக் கொள்வதாகவும், குடியரசுக் கட்சியை சேர்ந்த, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பிற்கு தான் வாழ்த்துத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அமைதியான முறையில் அதிகார பரிமாற்றம் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும், மக்கள் தன் மீது வைத்த நம்பிக்கைக்காக, தான் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகவும், இனிவரும் காலங்களில் தான் பெண்களின் உரிமைகளுக்காகவும், துப்பாக்கி வன்முறைக்கு எதிராகவும் தொடர்ந்து போராடவுள்ளதாகவும் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார். (நி-8)

# சிறுவர்களுக்கான சமூக ஊடக அணுகலை தடைசெய்யும் அவுஸ்திரேலியா

(கன்பெரா)

16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களுக்கான அணுகலை பெறுவதை தடைசெய்யும் புதிய சட்டம் இயற்றப்படும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்தார்.




இதற்கு இணங்காத சமூக ஊடக தளங்களுக்கு எதிராக அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய சட்டமூலமானது எதிர்வரும் நவம்பர் பிற்பகுதியில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வருட காலம் அவகாசம் வழங்கப்படும்.

தொழில்நுட்ப தளங்கள் தடையை எவ்வாறு செயற்படுத்துவது என்பதைக் கண்டறிவதற்காகவே இவ்வாறு ஒரு வருட அவகாசம் வழங்கப்படும் என்றும் அவுஸ்திரேலிய பிரதமர் சுட்டிக் காட்டினார்.

அவுஸ்திரேலியாவின் கொள்கை மிகவும் கடுமையான ஒன்றாக இருந்தாலும், பல நாடுகள் ஏற்கனவே சட்டத்தின் மூலம் சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதாக உறுதியளித்துள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டில் அதிகரிக்கும் தோல் புற்றுநோயாளர்கள்

## வைத்தியர்கள் எச்சரிக்கை

**கொழும்பு**

**இலங்கையில் கடந்த சில வருடங்களாக தோல் புற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தோல் நோய் வைத்திய நிபுணர் மருத்துவர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்துள்ளார்.**

சுகாதார மேம்பாட்டுப்பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் தோலில் பயன்படுத்தப்படும் பல்வேறு அழகுசாதனப் பொருட்களும் ஒரு காரணம் எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் தோலை ப்ளீச் செய்வதன் ஊடாக சூரிய ஒளியில் இருந்து வரும் கதிர்களால் சருமம் நேரடியாக பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில் சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள சத்தான உணவுகளை உண்ணவேண்டும் என்றும், தோலில் ஏதேனும் பாதிப்புகள்ஏற்பட்டால் முறையான சிகிச்சைகளை பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். (நி-8)

# அமெரிக்க ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த அநுர

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பிற்கு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதிய அமெரிக்க நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட விரும்புவதாகவும் அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ட்ரம்பிற்கு இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்க மற்றும் இலங்கை மக்களின் நலன்களுக்காக பொதுவான நோக்கங்களுக்காக இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 400-500 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 300 |
| தக்காளி | 300 | 330 | 350 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 240 | 200-250 | 200 |
| கோவா | 200 | 180 | 200 | 250 | 300 |
| கரட் | 160 | 180 | 180 | 150 | 200 |
| பூசணி | 100 | 100 | 80 | 110 | 150 |
| புடோல் | 160 | 180 | 150 | 250 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 120 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 220 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 500 | 550 | 650 | 500-600 | 800 |
| வெண்டக்காய் | 100 | 200 | 120 | 150-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 150 | 100 | 250 |
| பயற்றங்காய் | 450 | 600 | 550 | 500-600 | 600 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 600 | 600 | 500-550 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 150 | 130 | 30-60 | 200 |
| போஞ்சி | 350 | 300 | 300 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | -- | 350 |
| கீரை – 1 பிடி | 150 | 150 | 150 | 120 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 | 350-400 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-160 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 600 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 500 | -- | -- | 500 |
| முள்ளங்கி | 150 | 120 | 180 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 120 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | -- | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 258



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# எறும்பின் கர்வம்!

ஒரு சமயம் இந்த உலகத்திலே உள்ள எறும்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு மகாநாடு நடத்தியது. அகில உலக எறும்புகள் மகாநாடு!

அதிலே ஒரு எறும்புத் தொண்டர் பேசுகின்றார். எறும்புச் சகோதரர்களே! எறும்பு சகோதரிகளே! இந்த உலகத்திலே எமக்கு பெரிய எதிரி யார் என் கேட்டால் அது யானை தான்.

நாம் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்கேயாவது போய்க்கொண்டிருப்போம். அப்போது திடீர் என்று ஒரு யானை வந்து எங்கள் மேலே காலை வைக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன ஆகும்? ஆயிரக்கணக்கான எம் தோழர்கள் இறந்து விடுவோம். இதைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும் என்றார்.

அடுத்தபடியாக ஒரு எறும்புப் பிரதிநிதி பேச வந்தார்!

நாம் எல்லோரும் சேர்ந்து நம்முடைய எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு உட்காந்தார்.

அதன்பின் அந்த எறும்புகள் எல்லாம் பல குழுக்களாகப் பிரிந்து ஆலோசனை செய்தார்கள். கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அது எப்படி என்றால் அவர்களுக்குள்ளே ஒரு அகில உலக தலைவரை தேர்ந்தெடுப்பது.

அந்த தலைவர் கடவுளை வேண்டி தவம் செய்யவேண்டும். கடவுள்வந்ததும் அவரிடம் ஒரு வரம் வாங்க வேண்டும். அதாவது நாம் யானைகளை சாகடித்தால் அது சாக வேண்டும் என்கின்ற வரம்.

இது தான் அவர்கள் செய்த முடிவு. உடனே அந்த மகாநாட்டிலே அந்த தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது. எல்லா எறும்புகளும் சேர்ந்து ஒரு தேர்தலை நடத்தினார்கள். ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஏகப்பட்ட போட்டிகளுக்கு நடுவிலே ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவராகிய உடனேயே அந்த எறும்புக்கு ஆணவம் வந்து விட்டது.

எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான் தான். கடவுளிடம் வரம் வாங்கி கொடுக்க வேண்டியது என்னுடைய கடமை. எப்பேர்பட்ட வரம் வாங்கப் போகின்றேன் என்பதை கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள் என்றது.

அதிக காலம் தவம் இருந்தது. அந்தத் தலைவர் எறும்பு. ஒரு நாள் கடவுள் காட்சி கொடுத்தார். ஏறும்பே உன் தவத்தை மெச்சினேன். என்ன வேண்டும் கேள் என்றார்.

உடனே அந்த எறும்பு வேறு ஒன்றுமில்லை நான் கடித்தால் சாகவேண்டும் அவ்வளவும் தான் என்றது. சரி தருகின்றேன் என்று சொல்லிவிட்டார் கடவுள்.

வரம் வாங்கியாச்சு. இந்த எறும்பிற்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்குதா என்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமே என்ன செய்து யாரைக் கடிக்கலாம் என்று யோசனை செய்தது.

எதிரிலே வரம் கொடுத்த கடவுள் தான் நின்று கொண்டிருந்தார். அது தான் வரம் வாங்கியாச்சே இனிமேல் இவர் என்னத்திற்கு என்று யோசனை செய்தத்து.

உடனே அவரை ஒரு கடி கடித்தது. அவர் உடனே பட் என்று கையாலே ஒரு தட்டுத் தட்டினார். எறும்பு அப்பாடா என்று கத்திக் கொண்டே சுருண்டு விழுந்தது. வலி தாங்கமுடியவில்லை.

என்ன கடவுளே இது. வரம் பலிக்கவில்லையே நீங்கள் சாக வேண்டும் அல்லவா? இப்போது நான் தான் இறந்து விடுவேன் போல் இருக்கின்றது என்றது எறும்பு. தரையிலே இருந்தபடியே.

கடவுள் சிரித்துக் கொண்டே சொன்னார். நீ என்ன வரம் கேட்டாய்? நான் கடித்தால் சாக வேண்டும் என்று வரம் கேட்டாய் கொடுத்து விட்டேன். இப்போது நீ கடித்தே சாகப் போகின்றாய் என்றார்.

இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்க வேண்டும். நான் கடித்தால் நான் யாரைக் கடிக்கின்றேனோ அவர்கள் சாகவேண்டும் என்று தானே கேட்டிருக்க வேண்டும். ஏன் அது அப்படிக் கேட்கவில்லை தெரியுமா? ஆணவம். ஆணவம் வந்தால் அறிவு மழுங்கிவிடும். அதனாலே அவசரத்திலே அப்படி கேட்டுவிட்டு மாட்டிக்கொண்டது. நமக்கும் அப்படித் தான். ஆணவம் வந்துவிட்டால் அறிவு சரியாக வேலை செய்யாது.

ஒரு இடத்திலே எறும்புகள் எல்லாம் வரிசையாக போய்க்கொண்டிருந்தது. அந்த வழியாக ஒரு ஆண் யானையும் ஒரு பெண் யானையும் வந்தன. எறும்புகள் குறுக்கே போவதைப் பார்த்ததும் பெண் யானை நின்றது.

ஆண் யானையைப் பார்த்து நீங்கள் கொஞ்சம் நில்லுங்கள் என்றது. ஏன் நிற்கச் சொல்கின்றாய் என்று கேட்டது அது. பாவம் எறும்புகள். அவையெல்லாம் போகட்டும். தவறுதலாக நாம் மிதித்து விடக்கூடாது என்றது பெண் யானை.

சரி வா அந்தப் பக்கமாக விலகிப் போய்விடுவோம் என்று சொல்லி ஆண் யானை பெண் யானையை அழைத்துக் கொண்டு வேறு பக்கமாகப் போனது.

இதைப் பாரத்து விட்டு ஊர்ந்து போய்கொண்டிருந்த எறும்புகளிலே ஒன்று இன்னொரு எறும்பிடம் சொல்லியது பார்த்தியா நாம் கடித்து விடுவோம் என்று பயந்து கொண்டு யானையும் விலகி ஓடிக்கொண்டிருக்கின்றது என்றதாம்.

அதற்கு இன்னொரு எறும்பு பாவம் யானைகள் பிழைத்துப் போகட்டும் விட்டுவிடுவோம் என்றதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலித் தேசியவாதிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும்

## அங்கஜன் இராமநாதன்



(சாவகச்சேரி)

தமிழ் மக்களுடைய இருப்பினைத் தொடர்ந்தும் தக்கவைக்க போலித் தேசியவாதிகளோடு போராட வேண்டியுள்ள நிலையில் மக்கள் இந்த தேர்தலில் போலித் தேசியவாதிகளை இனங்கண்டுகொள்ள வேண்டும் என ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பாளரான அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று புலித்தோல் போர்த்திய பூனைகளாக போலித் தேசியவாதிகள் பலர் எம் மக்களை ஏமாற்றி அவர்களின் இருப்புக்களோடு விளையாடி வருகின்றனர். அவர்களை மக்கள் இம்முறை தேர்தலிலாவது விரட்டியடித்து தமது இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

75வருடங்களாக வடக்கு வாழ் தமிழ் மக்கள் படிப்படியாக தமது இருப்பினை இழந்து வருகின்றனர். அந்த இழப்பின் தாக்கத்தை நாம் இன்று அதிகம் உணர்கிறோம். அதாவது ஒன்பதாக இருந்த யாழ். தேர்தல் மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இன்று ஆறாகக் குறைவடைந்துள்ளது.

மக்கள் தற்போதும் கூட போலித் தேசியவாதிகளுடைய சுயலாப அரசியலை உணரவில்லையென்றால் அடுத்த தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் மேலும் சில பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழப்பது உறுதி.

எனவே இம்முறை தேர்தலில் வடக்கு மக்கள் போலிகளை அறவே புறக்கணிக்க வேண்டும்.

அதுவே தமிழரின் இருப்பிற்கும்,பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் எனத் தெரிவித்தார் (நி-6-30)

# நீதிமன்றத்தில் வைத்து கையூட்டு பெற்ற அலுவலர்

## விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான்

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து லஞ்சம் பெற்ற குற்றச் சாட்டில் வவுனியா சிறைச்சாலை அலுவலர் ஒருவர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வவுனியா சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதவான் நீதிமன்றில் கடமைக்காக வந்துள்ளார்.

குறித்த சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதிமன்ற தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை பார்வையிடுவதற்காக சென்ற பெண் ஒருவரிடம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபரை பார்வையிடுவதற்காக 1000 ரூபாய் பணத்தை பல வந்தமாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் குறித்த சிறைச்சாலை அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணினால் அடையாளம் காண்பிக்கப்பட்ட நிலையில் குறித்த சிறைச்சாலை அலுவலர் நீதவான் நீதிமன்றில் வைத்து கைது செய்து விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதி மன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த சிறைச்சாலை அலுவலரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (நி-6-285)

# மன்னார் ஓலைத்தொடுவாயில் கனியவள மணல் அகழ்வு

## பொதுமக்கள் எதிர்ப்பு

(மன்னார்)

மன்னாரில் கனிய வள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு அறிக்கை தயாரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து பாதை மறியலில் ஈடுபட்ட பொது மக்கள்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் வளநகர் பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடைமுறைப்படுத்தும் கனியவள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு ஆவணம் தயாரிக்கும் நடவடிக்கைக்காக நேற்று முன்தினம் மன்னார் மற்றும் தென் பகுதிகளில் உள்ள சுமார் 20 வரையிலான திணைக்கள அதிகாரிகள் பெரும் தொகையான வாகனங்களில் குறித்த பகுதிக்கு வருகை தந்தனர்.

குறித்த விடயத்திற்காக அதிகாரிகள் வருகை தருவதை அறிந்த அக் கிராம மக்கள், பொது அமைப்புக்கள் ஒன்றுதிரட்டி வருகை தந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு செல்ல முடி யாது பாதையில் மறியல் இட்டு எதிர்ப்பினை வெளிப்படுத்தி இருந்தனர். (நி-6-285)

# தேசிய மட்ட குத்துச் சண்டை

- வவு.பூந்தோட்ட ம.வி–தங்கம்
- வற்றாப்பளை ம.வி–வெண்கலம்




(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான தேசிய மட்ட குத்துச் சண்டை போட்டியில் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த எல்.கஜேந்தினி தங்கப் பதக்கமும் வற்றாப் பளை மகாவித்தியா லய மாணவன் ச.யதுர்சன் வெண்கல பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையி லான தேசிய மட்ட குத்துச் சண்டை போட்டிகள் கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 54 கிலோ எடை பிரிவில் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த எல்.கஜேந்தினி தங்கம். அதே வயதுப்பிரிவில் ஆண்களுக்கான 60கிலோ எடை பிரிவில் வற்றாப்பளை மகாவித்தியாலய மாண வன் ச.யதுர்சன் வெண்கலம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. [illegible]


13 ஆம் ஆண்டிலே நினைவு கூர்வோம்
வட்டு வடக்கு ஊர் மடியில் தடம் பதித்து மறைந்தும் மறையாத மாணிக்கமாகத் திகழ்கின்ற
உயர்திரு. வேலுப்பிள்ளை பொன்னம்பலம்
(சங்கானை பாக்கியரத்தினம் காட்வெயார்ஸ் உரிமையாளர்)
தரன் ரேடேஸ் யாழ்ப்பாணம், பணிப்பாளர் Jet Steal - Colombo-12

தாயின் மடியில் 11 - 10 - 1927
ஆண்டவன் மடியில் 02 - 11 - 2011
திதி:ஸப்தமி
தோன்றிற் புகழொடு தோன்றிடவே செய்தீர்கள்
ஆண்டுகள் பல அர்ப்பணிப்பால் அனைவரையும் கவர்ந்தீர்கள்
வேண்டுவன வேண்டுவோர்க்கு விரைந்துமே செய்தீர்கள்
நீண்டதோர் பரம்பரையின் நினைவுக்குள் மலர்ந்தீர்கள்
பூண்டதோர் கொடைக்கரத்தால் பூவுலகை ஆண்டீர்கள்
தீண்டியவை அனைத்தையுமே பொன் கொளிக்கச் செய்தீர்கள்
மாண்புடையீர் நாம் போற்றும் பொன்னம்பலம் ஐயாவே
சென்றாண்டு பதின்மூன்றில் உங்களை நாம் நினைவு கூர்வோம்.
(525)
வட்டு வடக்கு, சித்தங்கேணி.
உயிரில் கலந்த, குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 626





நீ அந்தரங்கமாகச் செய்த காரியம் இவ்வளவு தூரம் அம்பலமாகியிருக்கிறது! ஆகையினாலேதான் ஸ்திரீகள் இராஜாங்கக் காரியங்களில் தலையிடக் கூடாது என்று நம் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குந்தவை சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றாள். மறுமொழி என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. முதன் மந்திரி நன்றாகத் தன்னை மடக்கி விட்டார். அவர் சொல்வதில் உண்மை இருக்கத்தான் இருக்கிறது. இந்த எண்ணம் தோன்றியதும் வாணர்குல வீரன் மீது அவளுக்குக் கோபம் எழுந்தது. வீர சாகஸச் செயல்கள் அவன் செய்யக்கூடியவன்தான். ஆனால் காரியத்தைப் பகிரங்கப்படுத்திக் கெடுத்து விட்டானே? அவனைப் பார்த்து நன்றாகக் கண்டிக்க வேண்டும். இவ்வாறு எண்ணியதும் முதல் மந்திரியின் கட்டளையின்படி அவன் சிறைப்படுத்தப்பட்டது நினைவு வந்தது. என்னவெல்லாம் தொந்தரவுக்கு ஆளாகிக் கொண்டு எனக்கும் தொந்தரவு அளிக்கிறான்! சற்றுநேரம் சும்மா இருந்திருக்கக் கூடாதா? வைத்தியர் மகன் ஏதாவது உளறினால் அதற்காக அவர் பேரில் மேல் மாடத்திலிருந்து பாய்ந்து சண்டை தொடக்கியிருக்க வேண்டுமா?

"ஐயா! ஒரு கோரிக்கை செய்து கொள்கிறேன். பெரிய மனது செய்து நிறைவேற்றித் தரவேண்டும்." தேவி! கட்டளை இடு! இந்த இராஜ்யத்தில் உன்னுடைய வார்த்தைக்கு மறு வார்த்தை ஏது?"

தாங்கள் அரண்மனை வாசலுக்கு வரும் சமயத்தில் இரண்டு பேர்சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களைச் சிறைப்படுத்தத் தாங்கள் கட்டளையிட்டீர்கள்.

"அவர்கள் செய்தது பெருங்குற்றம். அரண்மனையில் மகாராணியின் கண் முன்னால் அவர்கள் சண்டை தொடங்கியது பெரும் பிசகு! அதுவும் எப்பேர்ப்பட்ட சமயத்தில்? பெரும் ஜனக்கூட்டம் கொதிப்புடனிருந்த நேரத்தில்! காரணம் தெரியாத ஜனங்கள் தாங்களும் சண்டையில் கலந்து கொண்டிருந்தால் எத்தகைய விபத்து நேர்ந்திருக்கும்? சிறு நெருப்புப்பொறி பெருங்காட்டையே அழிப்பது போல நாடு நகரமெல்லாம் கலகமும் குழப்பமும் விளைந்திருக்குமே!"

ஆம், ஐயா! அவர்கள் செய்தது பெரும் குற்றம் தான். ஆயினும் அவர்களில் ஒருவனை மன்னித்து விடுதலை செய்யும்படி தங்களை மன்றாடி வேண்டிக் கொள்கிறேன்.

இளவரசியின் அருளுக்குப்பாத்திரமான அந்தப் பாக்கியசாலி யார்?

"நான் இலங்கைத் தீவுக்கு அனுப்பிய தூதன் அவன் தான்." "பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று!" எதனால் இவ்வாறு சொல்கிறீர்கள்?

அந்தத் தூதனை நானே சிறைப்படுத்த வேண்டும் என்றிருந்தேன். இங்கே அவனாகவே எளிதில் அகப்பட்டுக் கொண்டான். எதற்காக? என்ன குற்றத்திற்காக?


தாயே! அவன் பேரில் பயங்கரமான குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது." அது என்ன?" பொன்னியின் செல்வனை அவன்தான் கடலில் தள்ளி மூழ்கடித்து விட்டான் என்று. என்ன நாராசமான வார்த்தைகள்! அப்படிக் குற்றம் சாட்டுவது யார்?"

பலரும் அவ்வாறு குற்றம் சாட்டுகிறார்கள். இளவரசரைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்த பார்த்திபேந்திரன் சொல்கிறான் பழுவேட்டரையர்கள் இருக்கலாம்' என்கிறார்கள். நானும் சந்தேகிக்கிறேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## தேவதை காட்டிய வழி

ஒரு அரசனுக்கு திடீரென இரண்டு கண்களும் குருடாகி விடுகிறது. அதை குணப்படுத்த மலை உச்சியில் உள்ள சஞ்சீவிமலையில் உள்ள மூலிகையைக்கொண்டு வந்து பிழிந்தால் தான் முடியும்.

அதற்கு மலையடிவாரத்தில் உள்ள தேவதை வழிகாட்டினால்தான் முடியும். அந்த அரசனுக்கு மூன்று குமாரர்கள்.

அதில் முதலாமவன் கொண்டு வருகிறேன் என கிளம்புகிறான். தேவதை வழி காட்ட ஓர் நிபந்தனை விதிக்கிறது. நான் உன்பின்னால் வருவேன்.

நான் இடது பக்கம் திரும்பு என்றால் இடது பக்கம் திரும்ப வேண்டும். வலது பக்கம் திரும்பு என்றால் வலதுபக்கம் திரும்ப வேண்டும்.

நீ நடப்பதை நிறுத்தக்கூடாது. நடந்து கொண்டே இருக்க வேண்டும். எது நடந்தாலும் பின்னால் திரும்பிக்க பார்க்க கூடாது என்கிறது.

முதாலாமவன் நடந்து செல்ல தேவதை வழிகாட்டிச் சென்றது. திடீரென பின்னால் வரும் தேவதையின் சலங்கை ஒலி கேட்கவில்லை. என்னாயிற்று என தன்னையறியாமல் முதாலமவன் திரும்பி பார்க்கிறான்.

நிபந்தனையை மீறி விட்டான். கற்சிலையாகிவிடுகிறான்.

அடுத்து இரண்டாமவன் கிளம்புகிறான். கிட்டத்தட்ட நிபந்னைகளுக்கு உட்பட்டு பாதிதூரம் வந்துவிடுகிறான். திடீரென சிரிப்பொலிகேட்கிறது. ஆர்வம் மிகுதியால் திரும்பிப் பார்க்கிறான். அவனும் கற்சிலையாகி விடுகிறான்.

மூன்றாமவன் அடுத்து வருகிறான். இவனுக்கும் இதே நிபந்தனையுடன் தேவதை பின்னால் வருகிறது.

இவனும் பின் வரும் சத்தம் நின்று போனாலும் முன்னே செல்கிறான். பின்னால் அலறல் சத்தம். சிரிப்பொலி. இவைகளுக்கெல்லாம் திரும்பாமல் முன்னே செல்கிறான் வெற்றி பெற்று மூலிகையையும் கைப்பற்றுகிறான்.

பின்னால் வரும் தேவதைதான் நமது மனசு. நிபந்தனையை விதித்து விட்டு செயல் உறுதியை தடுக்க எல்லா முயற்சியையும் செய்யும். அதை புறக்கணிப்பதில் தான் நம் வெற்றி அடங்கி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது ஒரு கல்விச்சாலை, அங்கு ஒவ்வொரு சூழ்நிலையும் நமக்கு நல்லதொரு பாடத்தையே கற்பிக்கிறது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவின் மகளை நிராகரித்த அமெரிக்கா

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரின் வெற்றி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றுச் சாதனை என்பதாகப் பேசப்படுகிறது.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ட்ரம்ப் 45ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்.

இருந்தும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னுடன் போட்டியிட்ட ஜோ பைடனிடம் ட்ரம்ப் தோற்றுப் போனார்.

அந்தத் தோல்விக்குப் பின்னால், ட்ரம்ப் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதில் குறிப்பாக தனிமனித ஒழுக்கத்தை அவர் மீறியவர் என்பதான விடயங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

தவிர, முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீது நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததோடு அவருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்த சம்பவங்களும் உண்டு.

இவை தவிர, ட்ரம்ப் எப்போதும் கொதிநிலையில் இருக்கக்கூடியவர். ஏறுமாறாகக் கதைக்கின்ற சுபாபம் உடையவர் என்ற குற்றச்சாட்டுக்களும் அவர் மீது இருந்தன.

இவ்விதம் பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்த டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றதென்பது ஆச்சரியமான உண்மையே.

இவ்வாறு அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் வெற்றி பெறுவதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு.

ஆம், ட்ரம்பை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர் அமெரிக்க ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கமலா ஹரிஸ்.

இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். கூடவே கறுப்பினம் என்ற வகைமைக்குள் அடங்குபவர்.

இருந்தும் தேர்தல் கருத்துக் கணிப்புகளின்போது, ட்ரம்ப் – கமலா இருவரும் 50க்கு 50 என்ற வெற்றிக் கணிப்பைக் கொண்டிருந்தனர்.

ஈற்றில் கருத்துக் கணிப்பு தலைகீழாக மாறி ட்ரம்ப் தேர்தலில் வரலாற்றுச் சாதனை படைத்தார்.

இங்குதான் ட்ரம்பின் வெற்றியும் கமலா ஹரிஸின் தோல்வியும் எங்ஙனம் சாத்தியமாயிற்று என்ற கேள்வி எழுகிறது.

ஆம், அமெரிக்கர்கள் தமது ஜனாதிபதியாக ஒரு பெண் இருப்பதை இதுவரை அனுமதிக்கவில்லை.

ட்ரம்பின் முதலாவது வெற்றி கூட; கிலாரி கிளின்ரன் எனும் பெண் வேட்பாளருடனான போட்டியிலேயே சாத்தியமாயிற்று.

ஆக அமெரிக்கா, வல்லாதிக்க நாடாக இருப்பதற்கு ஓர் ஆண் மகன் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் எழுதாத யாப்பு.

இதுதவிர, கமலா ஹரிஸ் இந்தியாவின் மகள். எனவே இந்தியாவின் மகள் அமெரிக்காவை ஆள்வதிலும் அமெரிக்கர்களுக்கு உடன்பாடில்லை என்பதனால் போலும் கமலா ஹரிஸின் வெற்றிக் கனி தட்டி விழுத்தப்பட்டது எனலாம்.

# தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதிகள் ஐந்தாண்டுகளில் பூர்த்தி செய்வதற்கானது

## அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் சிலர் குற்றஞ்சாட்டி வருவதாகக் கூறிய அமைச்சர் விஜித ஹேரத், தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் ஐந்தாண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்காகவே முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், ஐந்து வாரங்களுக்கானது அல்ல என்றும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய விடயங்கள் ஐந்தாண்டுகளில் பூர்த்திசெய்வதற்கானதாகும். சஜித் பிரேமதாஸ போன்ற சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறுவது போன்று ஐந்து வாரங்களுக்குள் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது.

நாங்கள் இன்னும் பல முடிவுகளை எடுக்க வேண்டும். ஐந்தாண்டுகளுக்குத் திட்டமிடப்பட்ட ஒரு பணியை ஐந்து வாரங்களுக்குள் முடிக்க முடியாது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபன அறிக்கை ஐந்தாண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும். நாங்கள் இன்னும் அரசாங்கத்தை அமைக்கவில்லை.

கடந்த ஐந்து வாரங்களுக்குள் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய முடிவுகளை எடுத்ததை வைத்து அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சிகள் பகல் கனவு காண்கின்றன.

நூற்றுக்கணக்கான அமைச்சர்கள் இருந்தும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறிய நிலையில், இறுதியில் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளனர். இருப்பினும் தற்போது மூன்று அமைச்சர்கள் மட்டுமே நாட்டை இயக்குகின்றனர்..

நாங்கள் இப்போது ஒரு புதிய பாதையில் பயணிக்கிறோம் என்பதைக் காட்டியுள்ளோம். ஊழல் அரசியல் கலாசாரம், மோசடி போன்ற விடயங்களே பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்றார். (ம-7)

## சுற்றுலாப் பயணிகள் விரும்பும் நாடுகளில்

### இலங்கை முதலிடம்

லண்டனில் நடைபெற்ற Wanderlust Reader Travel Awards 2024 இல் உலக சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் விரும்பத்தக்க தீவு நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

Wanderlust Reader Travel விருதுகளில் இலங்கையானது மிகவும் விரும்பத்தக்கத் தீவுக்கான தங்க விருதை வென்றுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கையானது கடந்த வருடம் எட்டாவது இடத்திலிருந்து முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

3 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளால் வாக்களிக்கப்பட்ட இந்த விருது, இலங்கையின் வசீகரிக்கும் நிலப்பரப்புகளையும், உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களைத் தொடர்ந்து வசீகரிக்கும் வளமான வரலாற்றையும் கொண்டுள்ளது. (ம-7)

### விமானப்படை மூலம்

## 130 மில்லியன் டொலர் திறைசேரிக்கு வருவாய்

2014 ஆம் ஆண்டு முதல் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் சுமார் 130 மில்லியன் அமெரிக்க டொலர்களை திறைசேரிக்கு வழங்கியுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் நிலைகொண்டுள்ள விமானப்படையினரின் துணிச்சல், நிபுணத்துவம் மற்றும் கடமைக்கான அர்ப்பணிப்புக்காக ஐக்கிய நாடுகளின் தலைமையகம் பாராட்டியுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் இராணுவப் படைகள் மீது சர்வதேச சமூகம் வைத்துள்ள நம்பிக்கையையும் இந்தச் சாதனை பிரதிபலிக்கிறது என்றும், இது உலக அரங்கில் தேசத்தின் நிலையை மேம்படுத்துவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐக்கிய நாடுகளின் பல பரிமாண ஒருங்கிணைந்த ஸ்திரப்படுத்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள விமானப்படையின் விமானப் பிரிவின் மற்றுமொரு குழுவின் வெளியேறும் அணிவகுப்பில் உரையாற்றும் போதே எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."**

-பிராங்க் லோயிட் ரைற்
(அமெரிக்கக் கட்டிடக் கலைஞர், எழுத்தாளர்)

## இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டவர் உயிரிழப்பு

மாத்தளை - லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹத்தொட்ட அமுன பகுதியில் உள்ள சுரங்கமொன்றில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஹத்தொட்ட அமுன பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

### 09 ஆம் திகதி வரை

## சின்னமுத்து தடுப்பூசி வழங்கல் திட்டம்

### வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்

எதிர்வரும் 9 ம் திகதி வரை விசேட சின்னமுத்து தடுப்பூசி வழங்கலத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் சின்னமுத்து நோய்க்கெதிராக 1984 ஆம் ஆண்டு தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் சின்னமுத்து நோயின் பரம்பல் எமது நாட்டில் படிப்படியாகக் குறைந்து 2019 ஆம் ஆண்டு முற்றாக ஒழிக்கப்பட்ட நிலையை அடைந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டு மே மாதம் முதல் எமது நாட்டில் சின்னமுத்து மீண்டும் பரவத் தொடங்கியுள்ளது.

எமது அயல் பிராந்திய நாடுகளில் சின்னமுத்து நோய் இன்னமும் கட்டுப்படுத்தபடாமையினாலும், சின்னமுத்து தடுப்பூசி பெற்றுக்கொள்ளப்படாதவர்களிடையேயும் ஒரு தடுப்பூசி மட்டும் பெற்றுக் கொண்ட 20 முதல் 30 வயதினரிடையேயும் தொற்று அதிகளவு பரவும் அபாயத் தன்மை காணப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக சின்னமுத்து தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 9 மாதங்களுக்கும் குறைவான குழந்தைகள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

எனவே இந்த சின்னமுத்து நோய்ப் பரம்பலை எமது நாட்டில் கட்டுப்படுத்தும் நோக்குடன் 04.11.2024 முதல் 09.11.2024 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சு சிறப்பு சின்னமுத்து தடுப்பு வாரத்தை ஒழுங்குபடுத்தியுள்ளது.

இதன் மூலம் 20 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதன் மூலம் சின்னமுத்து நோய் பரவும் ஆபத்திலுள்ளவர்களைப் பாதுகாக்க முடியும்.

இந்தத் தடுப்பூசியானது உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியைப் பெற்றுள்ளதுடன் அதன் தரமும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பல தசாப்த காலமாகப் பயன்படுத்தப்பட்ட நம்பிக்கையைக் கொண்ட இத்தடுப்பூசியானது உலகின் பல நாடுகளிலும் வழங்கப்படுகின்றது. எனவே இந்தத் தடுப்பூசியைப் பெற்று சின்னமுத்து நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக ஆலோசனைகள் தேவைப்படின் உங்கள் பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி தட்டுப்பாட்டிற்கு

# 'பீர்' உற்பத்தியே காரணம்

## ஆலை உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

பீர் உற்பத்திக்காக அதிகளவு அரிசி வழங்கப்படுவதால் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நேரடிப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பீர் தயாரிக்க பச்சை அரிசி தேவை. பச்சை அரிசி நாட்டரிசியில் இருந்தே பெறப்படுகிறது.

எனவே, பீர் உற்பத்திக்கு அதிக சதவீதத்தை ஒதுக்கும் போது நாட்டரிசி உற்பத்திக்கு தேவையான நெல் பற்றாக்குறை உள்ளது.

இதேவேளை, அரிசி விலையைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த சில வாரங்களாக இலங்கை சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து அரிசி தட்டுப்பாடும் ஏற்பட்டது.

நிலைமையை கருத்திற்கொண்ட ஜனாதிபதி, பாரிய அரிசி வர்த்தகர்களை அழைத்து கலந்துரையாடிய நிலையில், சில்லறைச் சந்தையில் நிலவும் அரிசியின் கட்டுப்பாட்டு விலையை தொடர்ந்தும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (நி-8)

# வாக்குச் சீட்டுகள் கிடைக்காதவர்கள் தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் நேற்றுடன் முடிவடைந்ததாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட கடந்த 27 ஆம் திகதி முதல் இதுவரை வாக்குச் சீட்டுகள் கிடைக்கப் பெறாத வாக்காளர்கள் இன்று முதல் தபால் நிலையங்களுக்கு சென்று அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

இன்று தொடக்கம் பொதுத் தேர்தல் நடைபெறும் நவம்பர் 14 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகளை தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்காக தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தபால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

# திருவுருவ அலங்கார துதிசெய்வோம் முருகவேளெனவும் அருள்தாராய் நல்லூரா

## இன்று தெய்வயானை உடனுறை கந்தன் திருவடிகளைத் தலைமேற்கொண்டு போற்றி வணங்குவோம்

### திருவுருவ அலங்காரத் துதி

*அருணகிரிநாதர் 879*

அலங்கார முடிக்கிரணத் திரண்டாறு முகத்தழகிற்
கசைந்தாடு குழைக்கவசத் ... திரடோளும்

அலந்தாம மணித்திரளை புரண்டாட நிரைத்தகரத்
தணிந்தாழி வனைக்கடகச் ... சுடர்வேலும்

சிலம்போடு மணிச்சுருதிச் சலங்கோசை மிகுந்ததிரச்
சிவந்தேறி மணத்தமலர்ப் ... புனைபாதந்

திமிந்தோதி திமித்திமித் தனந்தான தனத்தனைத்
தினந்தோறு நடிப்பதுமற்... புகல்வேனோ

இலங்கேசர் வனத்துள்வனக் குரங்கேவி யழற்புகையிட்
டிளந்தாது மலர்த்திருவைச் ... சிறைமீளும்

இளங்காள முகிற் கடுமைச் சரங்கோடு கரத்திலெடுத்
திருங்கான நடக்குமவற்...கினியோனே

குலங்கோடு படைத்தசுரப் பெருஞ்சேனை யழிக்க முனைக்
கொடுந்தாரை வெயிற்கயிலைத்...தொடும்வீரா

கொழுங்காவின் மலர்ப்பொழிலிற் கரும்பாலை புணர்க்குமிசைக்
குரங்காடு துறைக்குமரப்... பெருமாளே.

**அலங்காரா -நல்லூரா-** அலங்காரமான கிரீடம் ஒளி திரண்டுள்ள ஆறு முகங்களிலும், அழகுப் பொலிவுடன் அசைந்தாடுகின்ற குழைகள், கவசம் திரண்ட தோள்களின்மேல் திருப்தி தரும்படியான போதுமான, அருள் மிகுந்த போதுமான ரத்ன மணிக் கூட்டங்கள் நம் மனதைக் கவரும் வேலைப் பாட்டுடன் நகைகள் புரண்டாடுங் காட்சி வரிசையாய் அமைந்தனவாகவும், முருகனின் அருள் தரும் திருக்கரங்களில் அணியப்பட்டவையுமான அலங்காரங்கள், மோதிரம், புனைந்துள்ள வீரகடகம், கங்கணம், ஒளி வீசும் வேல், சிலம்பு, அழகிய வேத ஓல நடனம் காட்டும் சலங்கை, சதங்கை இவைகள் அருள் ஓசை மிகுந்த ஒலி செய்யச் செந்நிறம் மிக்க நறுமணம் வீசும் மலர்கள் புனைந்துள்ள **அருள் மிகு திருவடிகள்** திமிந்தோதி, திமித்திமித் தனந்தான, தனந்தான என்னும் வகையில் நாள் தோறும், தினம் தினம் **அலங்கார நடனம் செய்யும் அழகும் எல்லாம் மனம் அருள் நன்றாக நிரம்ப, அடியேன். சொல்லுவனே, சொல்லித் துதிக்க மாட்டேனோ! நல்லூரா, அலங்காரா, கந்தா, கடம்பா, குமரா** எனவும் திருப்புகழும், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி ஓதித் துதிப்போம்.

வசந்த மண்டபத்தில் சஷ்டி நாட்களில் விசேட லிங்க பூஜை தரிசனம் சிறப்பு.திருச்செந்தூரில் முருகன் பின்னால் ஓர் சிவலிங்கம் பூசை முதலாகவும் ஓர் குகையில் பஞ்சலிங்கம் அங்கு முருகன் பூஜை செய்வதாகவும் ஓர் ஐதீகம்.

பதினெண் சித்தர் தரிசனம் ஓர் சிறப்பு ஆகும்.

அருள் சுரந்த நாதர்கள் பதினெண்பேர் அம்பராம் பூரணத்தின் ஒளிகண்டோர்கள்.செழிப்புள்ள நல்லூர் சோலையிலும் பூஞ்சோலைகளிலும் எட்டுத்திசையும் மணி ஓசை கேட்கும் அலங்காரா! குமரப் பெருமானே! தூங்கி விழித்துக் கொண்டது போன்று இப்போது பிறந்தள்ள **இப் பிறப்பானது, திண்மையான ஞானம் பெறும்படி அருள்மிகு அழகிய சிவந்த திருவடிகளைத் தந்தருளுக! அலங்காரா! நல்லூரா!**

கச்சியப்பர்சிவாச்சாரியார்கந்தபுராணம் எண்- 8146

திருமணம் நிகழ்ந்து முடிந்ததும் ஒளியுடைய வேற்படை ஏந்திய தெய்வானை உடன் முருகப் பெருமான் உமையம்மை உடன் சிவபெருமானை, அன்புடன் வலம் வந்து முறையாய் வணங்கினர் நாமும் அம்மை, அப்பன், தெய்வானை, கந்தன் திருவடிகளை வணங்குவோம்.

**க.கு.க சிவபாலன்** K.K.K
**ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம் போசகர்.**



# இராசிபலன்

08.11.2024
ஐப்பசி 22,வெள்ளிக்கிழமை
சப்தமி முன்னிரவு 10.17 மணிவரை

உத்தராடம் முற்பகல் 9.34 மணிவரை
சுபநேரம் -6.00-7.35 மணிவரை
இராகுகாலம் -10.35-12.05மணிவரை

சந்திராஷ்டமம்:
திருவாதிரை

**வளவன்**


மேஷம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசத்தில் இருந்து சுப செய்திகள் வந்துசேரலாம், இனிமையான நாள், கனவுப் பலிதமுண்டு.


கடகம்

வராத உறவினர்கள் உங்கள் வீடுகளிற்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள்.


துலாம்

வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.


மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் பெறலாம், தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனக் குழப்பங்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் நாள்.


சிம்மம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இனிமையான நாள்.


விருச்சிகம்

உறவினர்கள் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் கிடைக்கும் நாள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.


கும்பம்

தொழிலில் சில மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சிறிய வேலை யொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம்.


மிதுனம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர் செலவுகள்ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.


கன்னி

உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


தனுசு

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்டகால விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள்.

மனித சமுதாயத்தில் கல்வி தொட்டிலிலே ஆரம்பமாகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லையில்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புல்மோட்டை மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த நூஹூ லெப்பை மொகமட் முபீஸ் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தர் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை பாடசாலையில் அவர் தங்கியிருந்த அறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பாடசாலை வரவுப் பதிவு இயந்திரத்தில் வருகையைப் பதிவு செய்த பின்னர் வகுப்பறைகளுக்குச் சென்று காலை 10.30 மணி வரை பாடம் நடத்தியுள்ளார்.

அப்போது அவர் தனது இடமாற்றம் தொடர்பாகக் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்திக்கத் திருகோணமலை நகருக்குச் செல்லவுள்ளதாக மாணவர்களுக்குக் கூறியுள்ளார்.

இந்நிலையில், பிற்பகல் பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலை 3.30 மணிவரை வெளியேறுவதற்கான பதிவை இயந்திரத்தில் இவர் பதிவு செய்யவில்லை.

இதேவேளை, இவரது மனைவி தமது கணவருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதும் பதில் இல்லை. எனவே எங்கே எனது கணவர் உள்ளார் என்று பாடசாலை அதிபருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர் வினவியுள்ளார்.

இதையடுத்து அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மேற்படி ஆசிரியர் தங்கியிருந்த அறைக்குச் சென்று பார்வையிட்டபோது அவர் உயிரற்ற நிலையிலும், உள்ளாடை மற்றும் காற்சட்டை என்பன அவிழ்ந்த நிலையிலும், கால்களில் இரத்தக் காயங்களுடனும் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் புல்மோட்டை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7)

# ஆலயத்தில் வழிபட்ட பெண் மயங்கி விழுந்து மரணம்

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் வழிபட்டுக் கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நவாலி வடக்கு மானிப்பாயினைச் சேர்ந்த சந்திரசேகரன் சரோஜா என்ற ஐந்து பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த குடும்பப் பெண் கடந்த ஆறாம் திகதி ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய கொடித் தம்பத்துக்கு அருகில் நின்றவாறு முருகனை அழுத வண்ணம் வழிபாடாற்றிய நிலையில் திடீரென சுயநினைவற்று நிலத்தில் சரிந்துள்ளார்.

அவர் மயங்கியதாகக் கருதிய ஆலயத்தினர் நோயாளர் காவு வண்டிக்கு தகவல் அளித்துள்ளனர்.

அவர்கள் வந்து பரிசோதித்ததில் குறித்த பெண் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மரண விசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதோடு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்புக் காரணமாகக் குறித்த பெண் உயிரிழந்திருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7)

## வாகன விபத்து; ஒருவர் பலி

அநுராதபுரம், நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்புத்தேகம வீதியில் 04ஆவது கிலோ மீற்றர் மைல்கல் அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

தம்புத்தேகமவிலிருந்து நொச்சியாகம நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த முச்சக்கரவண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது முச்சக்கரவண்டியின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த பெண்ணும் நபரும் படுகாயமடைந்துள்ள நிலையில் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## நாவற்குழியில்...

யிரத விபத்தில் யாழ். மாநகர சபை பணியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

300 வீட்டுத்திட்டம் நாவற்குழியைச் சேர்ந்த மார்க்கண்டு சகாயராசா (வயது-53) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று வியாழக்கிழமை காலை வீட்டுக்கு முன்பாக இருந்த தண்டவாளத்தைக் கடக்க முற்பட்டபோது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றிருந்த புகையிரதம் அவரை மோதித் தள்ளியுள்ளது.

இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஜனநாயகத்...

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், பாராளுமன்றம் நாட்டின் மிக உயர்ந்த அமைப்பு. நாட்டுக்குத் தேவையான சட்டங்களை உருவாக்குவது பாராளுமன்றம் தான். நாட்டை முன்னேற்றுவதற்குத் தேவையான சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றுகிறது. நாட்டின் நிதியை பாராளுமன்றம் கட்டுப்படுத்துகிறது. அத்தகைய ஒரு உயர்ந்த நிறுவனத்தை தேசிய மக்கள் சக்தி விமர்சிக்கிறது. அந்தக் கட்சியின் வேட்பாளர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது ஆபத்தாகும்.

பாராளுமன்றத்தைத் திருடர்களின் குகை என்கிறார்கள். அவ்வாறு அது திருடர்களின் குகை என்றால் தேசிய மக்கள் சக்தியினர் ஏன் அங்கு வர முயற்சிக்கின்றனர். பாராளுமன்றமே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறது. அவர்கள் பாராளுமன்றத்திற்கு வந்தால் அது இந்த நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாகக் கூட அமையலாம் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.11.07 — சீட்டிழுப்பு இலக்கம் 5649 — K 2 0 1 1 5 4
அத சம்பத — K 1 1 5 4 — சீட்டிழுப்பு இலக்கம் 224

தன நிதானய — திகதி 2024.11.07 — சீட்டிழுப்பு இலக்கம் 1679 — Z 34 39 40 44 Z — Double Chance 56306

மெகா பவர் — திகதி 07/11/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1997 — U 01 12 16 28 54 — Double Chance 073140

லக்கி 7 VIP — திகதி 2024.11.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0475 — S 8 1 6 0 8 5 S

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3891 — சீட்டிழுப்பு திகதி 07.11.2024 — B 32 44 53 70 — B 009999

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.11.07 — சீட்டிழுப்பு இலக்கம் 958 — ரிஷபம் 06 36 45 59 — 150726 — 19

சுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 07.11.2024 — வெற்றி வாரம் 357 — E 8 1 9 2 6 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,175,040.00 — 81660

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2623 — சீட்டிழுப்பு திகதி 2024.11.07 — தினம் வியாழக்கிழமை — 25 44 54 58 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,376,003.20

சனிதா — திகதி 07.11.2024 — வெற்றி வாரம் 4784 — 07 25 60 71 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,571,484.00 — 66385

சசிரி — வெற்றி வாரம் 552 — 07.11.2024 — வியாழக்கிழமை — 14 27 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ஜய — சீட்டிழுப்பு வாரம் 4335 — சீட்டிழுப்பு திகதி 07.11.2024 — தினம் வியாழக்கிழமை — 08 15 30 43 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,042,762.40 — 136045

கப்ருக — 1799 — 07.11.2024 — வியாழக்கிழமை — K 31 12 25 49 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,756,476.00


அட கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2449 — சீட்டிழுப்பு திகதி 2024.11.07 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,573,368.80 — 35 62 73 75 X — 165128


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாராளுமன்றத் தேர்தல் - 2024


(யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)












2
கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்

இரு தேசம் ஒரு நாடு இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!

தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம்

9
செல்வராசா
கஜேந்திரன்



## ஊர் கோழிக் குஞ்சுகள்

1 நாள் குஞ்சுகள் - 130/=
விறாத்து குஞ்சுகள் - 1000/=
ஊர் கோழி 1Kg - 1000/=
தினமும் பெற்றுக் கொள்ளலாம்
சுழிபுரம் (523)
077 332 2433



## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1541)


## தெல்லிப்பழையில் சடலம் மீட்பு

தெல்லிப்பழை பன்னாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பத்து நாட்களுக்கு முன் இத்தாலியில் இருந்து நாடு திரும்பிய சரவணமுத்து சத்தியமூர்த்தி (வயது 68) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் விசாரணைகளினை மேற்கொண்டார். (ம-7)


## யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். (526)
அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.
50/=
-80/=
Happy Supermarket
உரும்பிராய்
077 121 5546 / 077 780 8030



## கணக்காளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வியாபார நிலையத்துக்கு ஆண் கணக்காளர் தேவை.
35 வயது முதல் 50 வயதுக்குள் உள்ளவர்களும் யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்களும் விரும்பத்தக்கது. (2590)
தொடர்புகளுக்கு: 077 468 3354



## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு |
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால் வலி
Sciatica | நாட்பட்ட சளி |
தலைக்கு இரத்தம் போகாமை
அதி விசேட மூலிகை, Acu சிகிச்சைகள்
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(2568)




இருப்பியல்
வையத் தலைமை கொள்

அங்கஜன்
இராமநாதன்

# இடுவோம் புள்ளடியை தபால்பெட்டிக்கு

தபால்பெட்டி சின்னத்திற்க்கு வாக்களிப்பீர்





(C-135)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.